கொக்குவில் இந்துக் கல்லூரி

# வணிகச்சுடர்.

மலர்-4



1997 - 1998

KOKUVIL HINDU COLLEGE.

# வணிகச்சுடர்
# VANIHACHCHUDAR
## 1997 – 1998

**வணிக மாணவர் மன்றம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்
யாழ்ப்பாணம்.

*1998, ஒக்டோபர் 03 வெள்ளி*

# தெரிவு செய்யப்பட்ட சில பிராந்திய பொருளாதாரக் கூட்டுக்கள் ஒப்பந்தங்கள் பற்றி ஓர் நோக்கு

சிதம்பரநாதன் - உதயகுமார்
B. A, (Hous) JAF
விரிவுரையாளர்,
பொருளியற்றுறை, யாழ். பல்கலைக் கழகம்.

உலகில் இரு மகாயுத்தங்கள் ஒன்றன் பின் ஒன்று தொடர்ந்து ஏற்பட்டமை யாவரும் அறிந்தவிடய மாகும். இதன் விளைவாக உலகப் பொருளாதாரங்கள் பலவும் பல்வேறு பொருளாதார, அரசியல் சமூக சீரழிவு நிலைகளுக்குத் தள்ளப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. இந்த நிலையில் இதனை உணர்ந்த பல நாடுகள் தம் எதிர்கால பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, அமைதி, பாதுகாப்பு, அரசியல் உறுதித் தன்மை போன்ற பல கோணங்களில் சிந்திக்கத் தொடங்கின. இதன் விளைவாக இந்த சீரழிவு நிலை யில் இருந்துவிடப்பட்டு நல்ல எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்கம் காணப்பட்டது. இதன் பிரதிபலிப்பாக நாடுகள் அனைத்தும், பிராந் திய ரீதியிலும், சர்வதேசரீதியிலும் அரசியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு போன்ற பல்வேறு தேவைகளைக் கவனத்தில் கொண்டும் பல்வேறு சர்வதேச அமைப்புக்கள், (உ+ம் உலகவங்கி, சர்வ தேச நாணய நிதியம், உலகவர்த்தக நிறுவனம் போன்ற பல) பிராந்திய ஒத்துழைப்புக்கள், (உ+ம் சார்க் அமைப்பு, ஆசியான் அமைப்பு, ஐரோப்பிய பொருளாதார சமூகம் போன்ற பல) பிராந்திய ஒத் துழைப்புக்களிற்குள் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்கள் (உ+ம் SAPTA, NAFTA, EFTA போன்ற பல) என்ற வகையில் 1940 களின் நடுப்பகுதியில் இருந்து இன்று வரை உருவாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

எனவே இத்தகைய பல அமைப்புக்கள் பற்றி நோக்குவதாயின் அது நீண்ட ஆய்வாக அமைந்து விடும். எனவே முழு அமைப்புக்களையும் நோக்காது பிராந்தியரீதியிலான ஒத்துழைப்புக்கள், ஒப்பந்தங் களை மட்டும் எடுத்து (அவற்றிக்குள்ளும் க. பொ. த. உயர்தர பழைய, புதியபாடத்திட்டப்படி பொரு ளியற் பரீட்சைக்குத் தோற்றும்) மாணவர்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் பிராந்திய பொருளாதார ஒத் துழைப்புக்கள், ஒப்பந்தங்கள் என்பவற்றில் தெரிவு செய்யப்பட்ட பின்வரும் (1) சார்க், (2) சப்ற்ரா (3) ஒபெக் (4) ஆசிய அபிவிருத்தி வங்கி (5) ஐரோப்பிய யூனியன் (6) எவ்ற்ரா (7) ஐரோப்பிய பொருளாதார சமூகம் (8) ஆசியான் (9) கொழும்புத் திட்டம் (10) நவ்ரா போன்றவற்றின் தோற்றம், நோக்கம், செயற்பாடு, இலங்கையில் இவற்றின் பங்கு என்ற அம்சங்களைக் கருத்திற்கொண்டு மிகவும் சுருக்க மாக இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

* தெற்காசிய நாடுகளுக்கிடையிலான பிராந்திய ஒத்து ழைப்பு அமையம் (சார்க்)

**South Asian Association For Regional Co-op eration (SAARC)**

தென் ஆசிய நாடுகளுக்கு இடையிலான பிராந் திய ஒத்துழைப்பு அமையத்தினைத் தோற்றுவிப்பது தொடர்பாக முன்னாள் பங்களாதேஷ் ஜனாதிபதி ''ஸியாவுர்ரகுமான்'' முன்வைத்த கருத்துக்களைத் தொடர்ந்து 1970 இன் இறுதி அரைப்பகுதியில் உத்தி யோக பூர்வப் பேச்சு வார்த்தைகள் பல நடைபெற் றன. அதனைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு யூன் 6 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை பங்களா தேஷில் உள்ள 'டாக்கா' நகரில் நடைபெற்ற அரசுத் தலைவர்கள் மாநாட்டில் பிரதேசக் கூட்டுறவினை தெற்காசியாவில் உருவாக்குவதற்கான 'சார்க்' அமைப்பினைத் தோற்றுவிப்பதற்கான பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ் வமைப்பு உருவானது. இதில் இந்தியா, பங்களாதேஷ் பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலை தீவுகள் ஆகிய ஏழு தெற்காசிய நாடுகளும் அங்கம் வகித்துவருகின்றன. இவ்வமைப்பு பங்களாதேஷ்

முன்னாள் ஜனாதிபதி ஸியாவுர் ரகுமான் (Ziaur Ruhuman) என்பவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பிராந்தியக் கூட்டுறவினை உருவாக்கும் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இவ் அமைப்பின் முக்கிய நோக்கங்களாக

* இவ்வமைப்பைச் சேர்ந்த நாடுகளின் அரசியல் பொருளாதர சமூக இடைவெளிகளை இட்டு நிரப்புதல்.
* அங்கத்துவ நாட்டு மக்களின் சமூக நலனையும், வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்துதல்.
* தென்னாசியப் பிராந்தியத்தின் பொருளாதார நலன்களைத் துரிதப்படுத்துவதுடன் சமூகமுன்னேற்றம் கலாச்சாரவிருத்தி, தனிநபர்களின் திறமையை உயர் நிலைக்கு விருத்தி செய்யச் சந்தர்ப்பம் வழங்குதல்.
* அங்கத்துவ நாடுகளிடையே கூட்டாக தன்நம்பிக்கையினை உயர்த்துதல்.
* அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றினதும் பிரச்சினைகள் பற்றி விளங்கிக் கொள்வதோடு அவற்றுக்கிடையிலான அன்னியோன்னிய நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
* அங்கத்துவ நாடுகளின் சமூக, பொருளாதார, கலாசார விஞ்ஞானத்துறைகளில் செயற்பாட்டு ரீதியான ஒத்துழைபையும் வேலைகளில் விருத்தியையும் ஏற்படுத்தல்.
* அங்கத்துவ நாடுகளின் குடித்தொகை, சிவில் விமானப்பயணம், சூரியசக்தி, தொடர்பாடல், புகையிரதசேவை போன்ற துறைகளில் ஆராய்ச்சி நிறுவனங்களை உருவாக்குதல்.
* கண்ணியமாக வாழ்ந்து உள்ளார்ந்த பண்புகளை பூரணமாக உருப்பெறச் செய்வதற்கு தனிப்பட்ட அனைவருக்கும் வாய்ப்பளித்தல்.
* தொழில்நுட்ப விஞ்ஞானத்துறைகளில் பரஸ்பரம் உதவுதல்.
* கலாசாரம், பரஸ்பரம், நம்பிக்கை புரிந்துணர்வுகளுக்கு தமது பங்களிப்பைச் செய்தல்.
* ஏனைய வளர்முக நாடுகளுடன் கூட்டுறவை வளர்த்தல்.
* பொதுவான அக்கறையுள்ள விடயங்களில் சர்வதேச அரங்குகளில் தமக்கிடையே கூட்டுறவை வலுப்படுத்தல்.
* அங்கத்துவ நாடுகளின் கலை, நுட்பம், பெண்கள் விவகாரம் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொள்ளல்
* சர்வதேச ரீதியில் சந்திப்பு நிகழ்வுகளின் போது முக்கியமான பொதுவிடயங்களில் அங்கத்தவரிடையே ஒத்துழைப்பினைப் பலப்படுத்தல்.
* ஒரே தன்மையான நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கொண்ட சர்வதேச பிராந்திய அமைப்புக்களுடன் கூட்டாகத் தொழிற்படல் போன்ற பல நோக்கங்களைக் கொண்டுள்ளது.

மேலும் செயற்பாடுகளின் போது பிராந்திய நாடுகளின் இறமை, ஒருமைப்பாடு, சுதந்திரம் என்பவற்றைப் பேணக்கூடிய வகையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றும், ஏற்படும் மோதல்களைக் கலந்துரையாடல் மூலம் தீர்க்க வேண்டுமெனவும் 10வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இவ் அமைப்பு மூலம் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஏழு அங்கத்துவ நாடுகளாலும் ஏற்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற விதி முறையையும் கொண்டுள்ளது.

இவ் அமைப்பு வருடாந்தம், எந்நாட்டில் சம்மேளனம் நடைபெறுகின்றதோ, அந்தநாட்டுத் தலைவரைச் சம்மேளனத்தின் தலைவராகக் கொண்ட 'சார்க்' சம்மேளனமும் அதற்கு உதவியாக மேலதிகமாக 1987ம் ஆண்டு ஜனவரி 16ம் திகதி நேபாளத்தில் ''காட்மண்ட்'' நகரில் ஸ்தாபிக்கப்பட்ட செயலகமும், இச்செயலகத்திற்கு இருவருடத்திற்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும் செயலாளர் நாயகமும், அவருக்கு உதவியாக ஏழுபேர் கொண்ட பணிப்பாளர் சபையும் (ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதி) இவை எல்லாவற்றுககும் உதவவென வெளிநாட்டு அமைச்சர் குழு, அரசசெயலாளர் குழு எனப்பல குழுக்களையும் கொண்டு வருடாந்தம் மாநாடுகள் நடைபெற்று அதில் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு வருடாந்தம் மாநாடுகளை நடாத்தி செயற்படும் ''சார்க்'' அமைப்பு

* முதலாவது மாநாட்டை பங்களாதேஷின் ''டாக்கா'' நகரில் 1985ம் ஆண்டிலும் பின்பு
* 2வது மாநாட்டை 1986ம் ஆண்டு இந்தியாவின் பங்களூரிலும்
* 3வது மாநாட்டினை 1987இல் நேபாளத்தில் 'காத்தமண்டு' நகரிலும்
* 4வத மாநாடு 1988ல் பாகிஸ்தானில் இஸ்லாமாபாத்திலும்
* 5வது மாநாடு 1990ல் மாலைதீவில் மலே நகரிலும்
* 1991 டிசம்பரில் 6வது மாநாடு கொழும்பு நகரிலும்

* 7வது உச்சிமாநாடு 1993இல் பங்காளதேசில் டாக்கா நகரிலும்
* 8வது உச்சிமாநாடு இந்தியாவில் 95 ஏப்ரல், மே மாதம் புதுடில்லியிலும்
* 9வது உச்சிமாநாடு 97 மே மாதத்தில் மாலை தீவில் மலே நகரிலும் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. மேலும்
* 10வது மாநாடு 98 இல் கொழும்பில் நடக்க உள்ளது

இவ்வாறு மாநாடுகள் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு, அபிவிருத்தி என்பன கருதி விவசாயம், கிராமிய அபிவிருத்தி, காலநிலை, தொலைத்தொடர்பு, சனத்தொகை, சுகாதார நடவடிக்கைகள் போன்றவற்றில் கவனம் செலுத்தியுள்ளதோடு இச் செயற்பாடுகளில் வெற்றியேற்பட எனவும், அந்நாடுகள் ஆபத்தின்போது பயன்படுத்தவெனவும், 1988ம் ஆண்டில் ''தானியவங்கி'' உருவாக்கியமை, 1994னை சூழல் ஆண்டாகப் பிரகடனம் செய்தமை; தீவிரவாதத்தை அடக்க ஒப்பந்தம் செய்தமை, போதைப் பொருள் ஒழிப்பு இயக்கம் ஆரம்பித்தமை போன்ற பல நடவடிக்கைகள் மேற் கொண்டமை சான்றாக அமைகின்றன.

* 1991ல் கொழும்பில் நடைபெற்ற 6வது உச்சி மாநாட்டில், சார்க் நாடுகளுக்கு இடையே வர்த்தகத்தை தாராளமயமாக்கும் கருத்து முதலில் முன் வைக்கப்பட்டது.
* 95ல் நடந்த (புதுடில்லியில்) 8வது மாநாடு சார்க்கின் 10வது வருட நிறைவுடன் 95 டிசம்பர் 10முதல் SAPTA செயற்பட இணக்கம் ஏற்பட்டது.

இங்கு இலங்கைக்கும் உலகிற்கும் இடையிலான மொத்த வர்த்தகமானது 1980ல் 30680 இலட்சம் டொலராக இருந்து. 1990ல் 45290 இலட்சம் டொலராக அதிகரிக்கக் இலங்கைக்கும் சார்க் அமைப்புக்கும் இடையிலான வர்த்தகம் 1980ல்1700 இலட்சம் டொலர்களிலிருந்து 1990ல் 2540 இலட்சம் டொலர்கள் ஆக உயர்ந்த போக்கினைக் காட்டுகின்ற போதிலும், தென்னாசியாவுடனான அதாவது 'சார்க்' அமைப்புடனான இலங்கையின் வர்த்தகத்தை உலகுடனான மொத்த வர்த்தகத்தின் வீதமாக நோக்கும் போது 1980ல் 6.7% இல் இருந்து 1990ல் 5.6% ஆகக் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில் மொத்த உலக வர்த்தகம் முறையே 1980ல் இருந்து 1990ற்கு 380100 இலட்சம் டொலரில் இருந்து 653700 இலட்சம் டொலர் ஆக உயர்ந்த நிலையும் சார்க் அமைப்புக்குட்பட்ட மொத்த வர்த்தகம் 12440 இலட்சம் டொலரில் இருந்து 17440 இலட்சம் டொலர் ஆக உயர்ந்துள்ளபோதும் மொத்த உலக வர்த்தகத்தில் சார்க் அமைப்புக்குள்ளான வர்த்தகத்தின் பங்களிப்பு 1980ல் 3.2% ஆக இருந்து 1990ல் 2.7% ஆக குறைவடைந்துள்ளமை சுட்டிக் காட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

இலங்கையின் வர்த்தகப்போக்கு உலகுடனும் சார்க் அமைப்புடனுமான ஒப்பீடு
(இலட்சம் டொலர்களில்)

| | உலகுடன் | சார்க்குடன் | உலக வர்த்தகத்தில் சார்க்பங்கு வர்த்தகத்தில் |
|---|---|---|---|
| 1980 | 30680 | 1700 | 6.7% |
| 1992 | 45290 | 2540 | 5.6% |

அட்டவணை: 1 மூலப் பொருளியல் நோக்கு செப்ரம்பர்/94

சார்க் அமைப்புக்குள்ளான வர்த்தகம் மொத்த உலக வர்த்தகம் பற்றிய ஒப்பிடு.

| | 1980 | 1990 |
|---|---|---|
| உலகமொத்த வர்த்தகம் | 3800100 | 653700 |
| சார்க் அமைப்குள்ளானமெத்த வர்த்தகம் | 12490 | 74401 |
| உலகவர்த்தகத்தில் சார்க் அமைப்பிற்குள் மொத்த பங்கு | 3.2 | 2.7 |

அட்டவணை: 2
மூலம் பொருளியல் நோக்கு செப்ரம்பர்/94
குறிப்பு: (இலங்கை வர்த்தகம் சார்பாக ஏற்றுமதி, இறக்குமதி இரண்டையும் உள்ளடத்தியுள்ளது.)

இலங்கைக்கும் சார்க் நாடுகளுக்கும் இடையிலான 90 ஆம் ஆண்டுக்கான வர்த்தகப் போக்கு. பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களில்

| | வங்காள தேசம் | பூட்டான் | இந்தியா | மாலை தீவு | நேபாளம் | பாகிஸ் தான் | SAPTA வில் இலங்கையில் வர்த்தகம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி | 10.0 | — | 02 | 7. | — | 33. | 70 |
| இறக்குமதி | 9.0 | — | 118. | 6. | — | 51. | 184. |

Source: Economic Review September/94

அட்டவணை: 3

மேலும் சார்க் நாடுகள் புதிய ஏற்றுமதிக் கைத் தொழில்களைத் தொடக்கி வைத்ததன் மூலம் அண்மைய வருடங்களில் தம் ஏற்றுமதிகளைப் பன்முகப் படுத்தி வந்துள்ள போதிலும்கூட, அக்கைத்தொழில்கள் பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள ஏற்றுமதிச் சந்தைகளை நோக்கியே நெறிப்படுத்திவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் மிகப்பெரிய தொரு ஏற்றுமதித் துறையாக ''ஆடைகள் ஏற்றுமதி'' அமைந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

இவ்வைகயில் சார்க் அமைப்பைப் சேர்ந்த நாடுகளுக்குள் உலக சனத்தொகையில் ⅕ பங்கினர் (120 கோடி மக்கள்) வாழ்கின்ற அதே நேரம் இவர்களில் 40% மான மக்கள் வறுமையில் காணப்படுகின்றனர். எனவே இவ்வறுமையை நீக்குவதில் இவ்வமைப்பானது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க தவறியுள்ளது என குறை கூறப்படுகின்றது. மேலும் சார்க் பிராந்தியத்துக்குள் நடைபெறுகின்ற வர்த்தகம் மொத்த வர்த்தகத்தில் குறைந்த பங்கினையே பெறுவதும் குறைபாடுடையதாகும். மேலும் அங்கத்துவ நாடுகளுக்கிடையே பெரிய நாடு சிறிய நாடு என்ற சந்தேகப்பார்வை இருப்பதும் குறைபாடுடையதாகக் கூறப்படுகிறது.

மேலும் 1997 மே மாதம் மாலைதீவில் நடைபெற்ற 9வது சார்க் உச்சி மாநாட்டில்

* பிராந்திய நாடுகளுக்கிடையே வறுமை குறைதல்
* பெண்கள், சிறுவர்கள் கடத்தல் போதைவஸ்து கடத்தல் என்பவற்றினை தடைசெய்தல்.
* சுற்றாடல் பாதுகாப்பினை விருத்தி செய்தல்.
* சமாதானத்தினை உருவாக்கி நல்ல அயல் உறவுகளை வளர்த்தல் போன்றவை தொடர்பாக கூடிய கவனம் எடுக்கப்பட்டது. அத்துடன் சார்க் நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக வலயத்தை 1995—2005 இற்குள் அமைப்பது என்ற தீர்மானத்தை 2001ம் ஆண்டுக்குள் விரைவுபடுத்துவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து சார்க் அமைப்பின் புதிய தலைவராக மாலைதீவு ஜனாதிபதி ''மஃமூன் அப்துல் கையூம்'' தெரிவு செய்யப்பட்டதோடு அடுத்து 10வது உச்சி மாநாட்டை அடுத்த வருடம் 1998 இல் 50வது ஆண்டு நிறைவு சுதந்திர தின விழாவை கொண்டாடவுள்ள இலங்கையில் நடாத்த விருப்பம் தெரிவித்த இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் விருப்பத்தை பங்களதேஷ்; பாகிஸ்தான் (அடுத்து மாநாடு நடைபெற உள்ள நாடுகள்) உடன்பட்டதோடு அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்று அடுத்த 10வது உச்சி மாநாடு கொழும்பில் நடைபெற அனைவரும் அநுமதித்த செயற்பாடு ஆனது சார்க் அமைப்பின் தென்ஆசியப் பிராந்திய நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புக்கான அமைப்பு என்ற பெயரின் பொருத்தப்பாட்டினை நிருபித்துக்காட்டுகின்ற ஒரு செயற்பாடாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இச் சார்க் அமைப்பின் நோக்கத்தின் வெற்றியானது இவ் அமைப்பு நாடுகள் யாவும் சந்தேகமற்ற பார்வையில் ஒரு முகத்தோடு புரிந்துணர்வுடனான செயற்பாட்டில் தங்கியுள்ளது எனலாம்.

* தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு (சப்ரா) South Asian Preferential Trade Agrement (SAPTA)

சார்க் அமைப்பைச் சேர்ந்த 7 நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1993 ஏப்ரலில் டாக்கா நகரில் கைச்சாத்திடப்பட்டு ஒப்பந்த உறுப்புரை 22 இற் அமைய SAPTA 1995 டிசம்பர் 7ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்த ஏற்பாடாகும். இது பிராந்திய நாடுகளுக்கிடையே உள்ள தீர்வை மற்றும் தீர்வை யல்லா தடைகளை அகற்றுவதன் மூலமாக பொரு

ளாதார ரீதியில் ஒத்துழைப்பு, கட்டற்ற வர்த்தகம் இரண்டையும் மேம்படுத்தும் நோக்கம் கொண்டது.

இவ்வகையில் இவ் உடன்படிக்கையானது உறுப்பு நாடுகள் தொடர்பான பொருளாதார மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி மட்டங்கள், அவர்களின் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் அவர்களின் தீர்வைக் கொள்கைகள் பொருளாதார அபிவிருத்தி மட்டங்களில் காணப்படும் பரந்தளவிலான வேறுபாடுகளை அங்கிகரிக்கின்ற தன்மை போன்ற பலவற்றைக் கவனத்தில் கொண்டு அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் சமமான நன்மை வழங்கக்கூடிய பொதுவான வர்த்தக சலுகைகளையும் மற்றும் பரஸ்பர முன்னேற்றங்களையும் அடிப்படையாக கொண்டுள்ளது.

மேலும் உறுப்புரிமையில் உள்ள குறைந்த அபிவிருத்தியில் உள்ள நாடுகளுக்கு தீர்வையற்ற மற்றும் மிகப்பரந்தளவிலான தீர்வை சலுகைகள் வழங்கல் போன்ற சிறப்புச் செயற்பாடுகளையும் மேலதிக வர்த்தக வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் கூடிய நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதுடன் மற்றைய பாதுகாப்புக்களுக்கும் உடன்பட்டது. எனவே உறுப்பு நாடுகள் தீர்வையை குறைத்தல், அல்லது அகற்றுதல் இணைந்த தீர்வை, மற்றும் தீர்வையற்ற தடை இருப்பதன் மூலம் வர்த்தகத்தை தாராளமயப்படுத்தல், பரஸ்பரவர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான மற்றைய நேரடி, வர்த்தக வழிமுறைகளை மேற்கொள்ளவும் தொடக்கத்தில் உடன்பட்டன. இந்த SAPTA வின் முக்கிய நான்கு கூறுகளாக தீர்வை, துணைத்தீர்வை, தீர்வையற்ற நிலை நேரடி வர்த்தக வழிமுறைகள் என்பவையாகும். இவைபற்றிப் படிப்படியாகப் பேசித் தீர்க்கப்படும் என இச் SAPTA எதிர்பார்க்கின்றது.

இலங்கையில் நடைபெற்ற முதலாவது வர்த்தக பேச்சுக்களின் முடிவில் 226 உற்பத்தி வகைகளுக்கு (வங்காளதேசம் - 12 வகை, பூட்டான் - 11 இந்தியா4 106 வகை, மாலைதீவு - 17 வகை நேபாளம் - 1) வகை, பாகிஸ்தான் - 35 வகை, இலங்கை - 31 வகை சலுகை வழங்க உடன்பாடு காணப்பட்டது. 1995 இன் இறுதியில் எட்டப்பட்ட முன்னேற்றத்தின்படி சார்க் நாடுகளின் வர்த்தகத்தில் சுமார் 1% ஐ மட்டுமே உள்ளடக்கும் உற்பத்திகளாகவே காணப்பட்டாலும் பரந்தளவிலான வர்த்தகத்தை உள்ளடக்க உறுப்பு நாடுகளிடையே வர்த்தக தாராளமயமாக்கற் செயற்பாட்டினை விரைவுபடுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1995 இல் கூடிய வர்த்தக தாராளமயமாக்கல் மீதான அரசாங்கங்களுக்கிடையிலான ஒரு வர்த்தக தாரளமயமாக்கல் பற்றிய இரண்டாவது சுற்றில் தீர்வையல்லாத வர்த்தகத் தடைகளை அகற்றுவதனையும் தீர்வை சலுகைகளை அதிகரிப்பதனையும் பரிசீலிக்க உடன்பட்டது.

தனியார் துறையாரின் பங்கேற்பினை அதிகரிக்க சார்க் நாடுகளின் தனியார் துறைகளுக்கிடையிலான நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டதின் விளைவாக சார்க் நாட்டு வியாபார சமூகத்தவர்கள் பேரயம் ஆனது 1995 இல் கொழும்பில் கூடி துறைவாரியான விடயம்பற்றி கலந்துரையாடல் குழு ஒன்றினை அமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. இது முறையே வேளாண்மை (பூட்டான்) உட்கட்டமைப்பு மற்றும் வலு (பாகிஸ்தான் கைத்தொழில்) (வங்காளதேசம்) முதலீடு மற்றும் வர்த்தகம் (நேபாளம்), ஆரச்சி மற்றும் அபிவிருத்தி (இந்தியா) பணிகள் (இலங்கை), சுற்றுலா (மாலைதீவு) என்ற அடிப்படையில் பரந்தளவான துறைகளை உள்ளடக்கி இருக்கும்.

1996 மார்ச் இல் வர்த்தக தாராள மயமாக்கல் தொடர்பான 2 வது சுற்றுப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதில்

* குறிப்பிட்டகால இடைவெளியில் தீர்வையல்லாத வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் மாதிரிகள் சுங்க நடைமுறைகளை
* இலகுபடுத்தல்
* பொருந்தச்செய்தல்
* ஒழுங்குமுறைப்படுத்தல்
* தீர்வை - தீர்வையற்ற கட்டுப்பாடுகளை ஓரளவுக்கு ஒழித்துவிடல்
* உற்பத்தி பாதுகாப்பு தீர்வை வெட்டுக்களை விரிவாக்கல் என்பன பற்றி அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சப்ரா SAPTA உறுப்பு நாடுகளிடையே வர்த்தக தாரள மயமாக்கல் முன்னேற்றம் கண்டு வருகின்றமையால் சார்க் அமைப்பு அநேகம் 2000 அல்லது 2005 ற்குள் சுதந்திர வர்த்தக பிராந்தியமாக மாறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் 1997 மே இல் மாலைதீவில் நடைபெற்ற 9 வது சார்க் உச்சி மாநாட்டில் இதனை 2001 ஆம் ஆண்டுக்குள் விரைவு படுத்தல் வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் இச்செயற்பாட்டின் மூலம் சார்க் நாடுகளுக்குள் சுதந்திர வர்த்தகம், சர்வதேச வர்த்தகம் என்பவற்றை விருத்தி செய்ய உழைப்பு உள்ளீடுகளை மலிவாகப் பெற ஏற்றுமதி செய்ய பொருத்தமான உற்பத்தி வகைகளைத் தெரிவு செய்யவும் சிறப்புச் தேர்ச்சி பெறவும் வழிவகுக்கும்.

எனினும் SAPTA நாடுகளுக்கிடையில் வர்த்தகமானது குறைந்த பங்கினை வகை கூறுகின்ற போதிலும் தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளின்

முக்கிய உறுப்பு நாடுகளுக்கிடையில் மட்டுமன்றி உறுப்பல்லாத நாடுகளுக்கிடையிலும் வர்த்தக வாய்ப்புகளை மேம்படுத்தி விரிவாக்கும் நோக்கில் உறுப்பு நாடுகளுக்கிடையே எதிர்பார்க்கப்பட்ட வர்த்தக தாராளமயப்படுத்தலில் தங்கியுள்ளது.

இலங்கை கூடிய தாராள வர்த்தகக் கொள்கை கொண்டுள்ள வேளையில் ''சப்ற்றா''. ஒத்துழைப்புடன் அனைத்து உறுப்பு நாடுகளும் இறுதியாக நடைபெற்ற உருகுவே சுற்றுசீர் அமைப்பு நடவடிக்கைகளின் குறிக்கோளுக்கு இசைந்து செல்லும் வகையில் முழு உலக நாடுகளும் முழுமையான தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக முறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் அங்க நாடுக்ளில் ஒன்றாக இலங்கையும் வர்த்தக அபிவிருத்தி உருவாக்க குறைவிருத்தி தொடர்பான விஷேட சலுகைகளைப் பெறவும் தீர்வையற்ற அல்லது சலுகைத் தீர்வையுடன் சர்வதேச வர்த்தகத்தில் நுழையவும் வலய நாடுகளுடன் தொடர்புடைய கைத்தொழிலை அபிவிருத்தி செய்யமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

* ஒபெக் அமைப்பு: (OPEC)

உலகில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் நலன் கருதி உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாக "ஒபெக்" விளங்குகின்றது. அதாவது உலகில் கனிய நெய் உற்பத்தி நடைபெறுகின்ற நாடுகளின் கூட்டாக ''அரேபிய பெற்றோலிய காங்கிரஸ்'' என்ற மாநாடு 1950 இல் நடைபெற்ற போது முன் வைக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 1960 இல் ஈராக்கின் தலைநகரான 'பக்தாத்தில்' கனிய நெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமையம் (Organisation of Pertroleium Exporting Coutnries) ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத், வெனிசுலா, போன்ற நாடுகளும் பிற்பட்ட காலங்களில் அல்ஜீரியா, இந்தோனேசியா, ஐக்கிய அரபுக்குடியரசு, கபோன், இக்குவடோர், கட்டார், லிபியா போன்ற நாடுகளும் இணைந்து 13 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலகில் 71% ஆன எண்ணெய் உற்பத்தி மத்தியகிழக்கு நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றபோதும், உற்பத்தி தொடர்பான முகாமை, சந்தைப்படுத்தல் என்பவற்றைப் பலம் மிக்க வெளி நாட்டு நிறுவனங்கள் மேற்கொள்வதால் இவ் உற்பத்தி நடைபெறுகின்ற நாடுகளுக்கு நன்மைகள் கிடைக்காமல் வேறு நாடுகளுக்குக் கை மாறுவதைத் தடுக்கும் முயற்சியாகவே இவ் 'ஒபேக் OPEC' அமைப்பு உருவாக்கப்பட்டது.

இவ்வகையில் இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்களாக

* கனிய எண்ணெய்க்கு உலக சந்தையில் நியாயமான விலையைப் பெற்றுக்கொடுத்தல்

* கனிய எண்ணெய் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்

* இவை தொடர்பாக உருவாக்கப்பட்ட தம் கொள்கைகளைப் பாதுகாத்தல்

* ஒத்துழைப்பினை அபிவிருத்தி செய்து கொள்ளல் என்பவற்றுடன்

* 1976 ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல்

* அபிவிருத்தித்திட்டங்களுக்கான முதலீட்டுத் தேவைகளுக்காக உதவி வழங்கல்

* சர்வதேச தாபனங்களுடன் நெருக்கமாகத் தொழிற்படல் (உதாரணமாக ஆக கொழும்புத் திட்டத்துக்கு உதவுதல்) போன்ற பல நோக்கங்களைக் கொண்டுள்ளது.

* இந்த ஒபெக் அமைப்பின் அதிகார சபையாக ''ஒபெக் சம்மேளனமும்'' இச் சம்மேளனம் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அமைச்சர்களைக கொண்டுள்ளதுடன் வருடம் இருமுறை சம்மேளனம் கூட்டப்பட்டு அதில் கொள்கைகள தீர்மானித்தல், முன்னேற்றம் பற்றிய மீளாய்வு செய்தல், போன்றவற்றையும் செய்து வரவும், இந்த சம்மேளனத்திற்கு மேலதிக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிர்வாக அமைப்பு, பொருளாதார ஆணைக்குழு செயலகம் என்பவற்றையும் கொண்டு செயற்படுகின்றது.

அத்துடன் அங்கத்துவ நாடுகளின் எண்ணெய் விலையை நிலையாக வைத்திருக்க வேண்டிய (தேவையான) நுட்பங்களையும், பொருளாதார வழிகாட்டல்களையும் செய்வதோடு, எண்ணெய் வளத்தைப் பாதுகாத்தல் தொடர்பான நடவடிக்கை, வளரும் நாடுகளுச்கு நிதியுதவி வழங்குதல், உலக வங்கி மற்றும் ஏனைய இணைப்பு நிறுவனங்களில் முதலீடு செய்தல் போன்ற பல கோணங்களில் தொழிற்படுகின்றது. ஆனாலும் எண்ணெய் நிரம்பலை வரையறுத்தல், விலை அதிகரிப்பைப்பேணல் என்பன பல நாடுகளைப்பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கூட வர்த்தக நிலுவை உள்நாட்டு உற்பத்திச் செலவு, பெற்றோலிய உற்பத்திகளதும் அது சார்பான உற்பத்திகளினதும் விலை உயர்வானது இதற்குரிய மாற்று உற்பத்திகளைத் தேடுதல் தொடர்பான செலவுகளைப்பாதித்துள்ள போதும் இந்த ஒபெக் அமைப்பானது இலங்கைக்கு கிராமியத்து மின் சக்தித் திட்டத்திற்கும், மாகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் சில செயற்திட்டங்களுக்கும்,

சென்மதி நிலுவைப்பிரச்சனைகளுக்கும் சலுகை அடிப்படையான சில உதவிகளையும் செய்தது. இந்த வகையில் 1981 இல் 183.6 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட உதவி பிற்காலங்களில் குறைந்து சென்று 1986, 1987 களில் மிகவும் குறைந்து அதாவது 7.6 மில்லியன் ரூபா உதவியையும் பின்னர் 1990 இல் 133.7 மில்லியன் ரூபா உதவியும் வழங்கியுள்ள போதும் இலங்கை இந்த அமைப்பின் எண்ணெய் விலை ஏற்ற விளைவால் நன்மை மட்டுமன்றி தீமைகளையும் அனுபவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

* ''ஆசிய அபிவிருத்தி வங்கி''
Asian Development Bank (ADB)

ஆசியாவினதும், தூர கிழக்கு நாடுகளினதும் அபிவிருத்தி, ஒத்துழைப்பு, முன்னேற்றம் போன்ற சேவை கருதி உருவாக்கப்பட்ட ஒரு நிதிக் கூட்டுத்தாபனமாக இவ் ஆசிய அபிவிருத்தி வங்கி விளங்குகின்றது. இது வளர்ந்து வரும் நாடுகளின் அபிவிருத்திக்கு இடையூறாக உள்ள மூலதனப் பற்றாக்குறைவும், தொழில் நுட்ப அறிவும், இது தொடர்பான நுட்ப முறைகளும் இல்லாமை போன்றவற்றை கவனத்தில் கொண்டு பெருமளவு வளரும் நாடுகள் 1963 ஆம் ஆண்டு மனிலா நகரில் கூடப்பட்ட ஆசிய, தூர கிழக்கு நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாட்டில் மேற்படி பிரச்சினைகளைக் கருத்தில் எடுத்து அவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கில் பிராந்திய தாபனம் ஸ்தாபிக்க வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் திகதி இவ் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைமையகம் பிலிப்பைன்ஸில் உள்ள மனிலா நகரில் அமைக்கப்பட்டதுடன் 1966 டிசம்பர் 19 ஆம் திகதி முதல் உத்தியோக பூர்வமாகச் செயற்படத் தொடங்கியது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வங்கியின் நோக்கமாக

* தன் பிராந்தியத்தில் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு பொருளாதார அபிவிருத்திக்கான நிதி வசதிகளை வழங்குதல்.
* அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கிடையே இணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளல்
* அங்கத்துவ நாடுகளுக்கு தேவைவயான தொழில் நுட்ப உதவிகளை வழங்குதல் போன்ற பல நோக்கங்களை கொண்டது.

இவற்றைச் செயற்படுத்த வங்கியின் ஒழுங்கமைப்பானது அதிபதிகள் சபையால் நிர்வகிக்கப்பட்டதோடு அதன் கீழ் எட்டு பிராந்திய அங்கத்தவர்களையும், நான்கு பிராந்தியத்தைச் சேராத அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய இரு வருட பதவிக் காலம் கொண்ட பன்னிரண்டு பேர் கொண்ட இயக்குநர் சபையும், அத்துடன் அதிபதிகள் இயக்குநர் சபையோ சேராத ஆனால் அதிபதிகள் சபையால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து வருட பதவிக்காலம் கொண்ட தலைவரையும் ஒப்பந்த அடிப்படையில் அங்கத்துவ நாடுகளிடமிருந்து பெற்ற 10 மில்லியன் டொலர்களை ஆரம்ப நிதியாகவும், மேலதிக தேவைக்கு கடன், வட்டி, வருமானம் மூலமும் திரட்டிக் கொண்டு தன் செயற்பாட்டை மேற்கொள்கின்றது.

மேற்படி வங்கியில் அங்கத்துவம் ஆசிய நாடுகளுக்கு மட்டுமன்றி பரந்த அடிப்படையில் 32 ஆசிய பசுபிக் நாடுகளையும் 15 ஐரோப்பிய அமெரிக்க நாடுகளையும் கொண்டுள்ளது. இவ் அங்க நாடுகளுக்கு 1%வட்டியில் இலகு கடன் வழங்கும் முக்கிய பண்பும் அங்க நாடுகளைப் பொருளாதார அடிப்படையில் A B, C என மூன்று குழுக்களாகப் பகுத்து கடன் வசதிகளை வழங்குவதுடன் வட்டி அறவிடுதல் செயற்பாடுகளையும், குறைந்த நாடுகளுக்கு இலகுவாகக் கடன் வழங்க 1974 இல் ''ஆசிய அபிவிருத்தி நிதி'' என்பதனை ஸ்தாபித்தலும், பலநோக்கு விசேட நிதி விவசாய விசேட நிதி என்பனவும் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு மூன்று குழுக்களாகப் பிரித்த போது குறைந்த வருமானம் பெறும் வறிய நாடுகளான இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் ... போன்ற 'A'க்குளுவைச் சேர்ந்த நாடுகள், இக்கடனில் விசேட உரிமையை பெற்றிருக்க அபிவிருத்தியை நோக்கி வேககச்செல்கின்ற பவுவாநில்சினி, இந்தோநேசியா பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ... போன்ற 'B'குழு நாடுகளுக்கு, வரையறுக்கப்பட்டளவில் இலகு கடனுக்கான உரிமையையும், முன்னேறிய தொழிநுட்பத்தை பயன்படுத்தும் பெரும் வெளிநாட்டு நாணய மாற்றை உழைக்கும் சிங்கப்பூர் ஹொங்கொங், பிஜி... போன்ற 'C' குழு நாடுகளாகவும் பாகுபடுத்தி தன் செயற்பாட்டை இவ்வங்கி மேற் கொள்கின்றது.

இத்தகைய கடனுதவிகளில் மூன்றிலொரு பங்குக்கு மேல் சக்திவள செயற்றிட்டங்களுக்கும், பிறிதொரு மூன்றிலொரு பங்கு விவசாயமும், விவசாயம் சார் கைத்தொழிற் செயற்றிட்டங்களுக்கும், 15%ற்கு சற்றுக் கூடுதலா போக்குவரத்து, செய்திப் பரிமாற்ற செயற் திட்டங்களுக்கும் கடன்களை வழங்குவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கை இவ் வங்கியிலிருந்து 1982இல் 147. 7 மில்லியன் ரூபாவினையும் 1990 இல் 3988.4 மில்லியன் ரூபாவையும் தேறிய வெளிநாட்டு உதவி என்ற வகையில் பெற்றுள்ளமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

* **ஐரோப்பிய பொதுச் சந்தை / ஐரோப்பிய பொருளாதார சமூகம்**
**European Comman Market / European Economic Comunity (E E C)**

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட அரசியல், பொருளாதார சீரழிவில் இருந்து விடுபட்டு முன்னேற வேண்டிய தேவையை உணர்ந்து கொண்ட நாடுகளில் பிரான்ஸ் தானே முன்னின்று செயற்பட்டதோடு பாரிஸ் என்ற தன்னாட்டு தலைநகரில் கூடி 1957 ஆம் ஆண்டு பங்குனியில் மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய ஆறு நாடுகளும் ஒப்பந்தம் செய்து கையொப்பம் இட்டதற்கிணங்க 1958 ஆம் ஆண்டு தை முதலாம் திகதியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இவ்வகையில் இந்த ஆறு நாடுகளும் பொதுவான பிராந்தியத்துக்கு வெளியேயான தீர்வை என்பதனுள் ஒரு சராசரிச் தீர்வையை அறிமுகம் செய்ததுடன் கைத்தொழில்துறைக்கு சுதந்திர வர்த்தகமும், விவசாய உற்பத்திகளுக்கு பொதுவான விலையும் வழங்கப்பட்டது. இவ்வகையில் 1970களில் ஊதியமும், முதலும் சுதந்திரமாக அசையக்கூடிய நிலை ஏற்பட்டது. 1975 ஆம் ஆண்டு தை 1 ஆம் திகதி ஐக்கிய ராச்சியம், அயர்லாந்து, டென்மார்க் என்பனவும் 1974 இல் கிறீசும், 1986 இல் ஸ்பெயின், போர்த்துக்கல் நாடுகளும் பின்னர் துருக்கியும் இணைந்து கொண்டதற்கு இணங்க அங்க நாடுகளின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது.

இந்த ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் நோக்கங்களாக

* பொருளாதார ஒருமைப்பாடு மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்குதல்.
* அங்கத்துவ நாடுகளுக்கு இடையில் பொதுச்சந்தை ஒன்றை ஏற்படுத்தல்.
* அத்தோடு அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஏற்றுமதி, இறக்குமதி வரிகளை நீக்குதல் என்ற முறையினை 1957 ஆம் ஆண்டு மார்ச் 25 இல் உரோமில் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தை பத்து வருடங்களுக்கு செய்தல்.
* வர்த்தக நடவடிக்கைகளில் அங்கநாடுகளை ஒரே பொருளாதார சமூகமாக தொழிற்படுத்தல்.
* அங்கத்துவமற்ற நாடுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின் போது அங்கத்துவ நாடுகளுக்குப் பொதுவான நிபந்தனைகளையும் சுங்கவரி முறைகளையும் கையாளுதல்.
* அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்க்க உதவுதல்.
* இவ்வகையிலே பொருளாதார அரசியல் ரீதியாக பலம் பொருந்திய ஐரோப்பாவை கட்டி எழுப்புதல் போன்ற பல நோக்கங்களைக் தன்னகத்தே கொண்டு எதிர்வரும் நூற்றாண்டில் ஒன்றிணைந்த ஐரோப்பாவை கட்டியெழுப்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் அங்கத்துவ நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளுக்குச் சலுகை அடிப்படையில் விதிக்கப்பட்ட சுங்கவரி முறையானது 1970 களுடன் முற்றாக நீக்கப்பட்டுள்ளமை முக்கியம் பெறுவதுடன் இச்சந்தைக் கூட்டின் செயற்பாடானது.

i) ஆணைக்குழு

ii) அமைச்சரவை

iii) ஐரோப்பியப் பாராளுமன்றம்.

v) நியாயாதிக்க சபை போன்ற முக்கியமான நான்கு, சபைகளைக் கொண்ட அமைப்பாக இருந்து பல செயற்பாடுகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த EECன் துரித வளர்ச்சியானது இதற்கு வெளியே உள்ள ஒத்துழைப்பு அமைப்புகளில் கைத்தொழில் பொருள்களின் கேள்வியை உயர்த்தியது எனலாம். இவ்வகையில் 'கெனடி ரோக்கியோ' சுற்றுப் பேச்சின் போது சுங்கத்தீர்வையின் அளவு குறைந்த மட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதனால் வர்த்தகத் திருப்பம் விவசாயப் பொருள்களில் ஏற்பட்டது. இதை வெப்பவலய உற்பத்திகளான அமெரிக்காவின் தானியத்தைக் குறிப்பிடலாம். இவ்வகையில் EECன் பொதுவான விவசாயக் கொள்கையை அபிவிருத்தி செய்வது கஷ்டமாக இருந்தது. இதன் இறுதி விளைவாக நுகர்வைத் தியாகம் செய்கின்றனர். பிரான்சிய விவசாயிகள் உயர்ந்த பண்ணை விலைகளைப் பேணினர். EECயானது ஒரு பொதுவான பண்ணைவிலையை நிர்ணயிக்கும் போது இறக்குமதி செய்யப்படும் விவசாயப் பொருள்களின் மீதான தீர்வைக்கேற்ப உயர் விலை சமப்படுத்தப்படும். இவ்வகையில் மாறத்தக்க இறக்குமதி வரி விதிப்புக்கள் காணப்படும். இது பெரிய மிகையை ஏற்படுத்தியதுடன் களஞ்சியப்படுத்தற் செலவு, ஏற்றுமதி மானியம் என்பவற்றைக் கூட்டியது. பின்பு ''Rome'' மாநாட்டில்'' ஆபிரிக்காவில் உள்ள 46 நாடுகளில் இருந்துவரும் இறக்குமதிமீதான வர்த்தகத் தடைநீக்கப்பட்டது இலங்கையில் EEC யின் பழைய குடியேற்றங்கள், அரேபிய பசுபிக் பிரதேசங்கள், முன்பு 1971ல், EEC, வளரும் நாடுகளில் இறக்குமதியாக்கும் தயாரிப்பு பொருட்களும் முடிவுறாத தயாரிப்பு பொருட்களுக்கும் பொது

வான தீர்வைச் சலுகை வழங்கப்பட்டது. வளரும் நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் துணி, உருக்கு இலத்திரனியல், நுகர்வுப் பொருள்கள், பாதணி போன்றசில பெரியளவிலான இறக்குமதிப் பொருள்கள் சேர்க்கப்படவில்லை.

1979ல் ரோக்கியோவில் நடைபெற்ற சுற்றுப் பேச்சில் வெப்பவலய உற்பத்தி மீது சலுகைகள் விரிவு படுத்தப்பட்டது. பழைய குடியேற்ற நாடுகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் வியாபாரத் தடையை நீக்கினாலும் வர்த்தகத் திருப்பத்தினால் கசப்பு நிலை உருவாகியது. EEC ன் மூலம் ஓரளவு நிலையான நலன் GNPல் 1%ற்கும் குறைவாகவே உள்ளது. சிறந்த அளவீடு சாத்தியமில்லையெனலாம். ஆனால் பெரிய ளவிலான நன்மை அரசியல் ரீதியில் இருந்திருக்கும். ஏனெனில் நாடுகள் தனித்த பொருளாதார சமூக நாடுகளாக ஒற்றுமைப்பட்டுள்ளது. (உ-ம்: பிரான்ஸ் - ஜேர்மனி முன்பு பகை) EEC முழுமையான பொரு ளாதாரக் கூட்டாகச் சேர்வதற்கான பாதை மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில் 1971ல் ஏற்பட்ட சர்வதேச நாணய முறிவும் 1973ல் உலகில் ஏற்பட்ட பெற்றோலிய விலையுயர்வும் தடையாக அமைந்தது.

இவ் வகையில் இதன் தொழிற்பாட்டின் வெளிப் பாடுகளாக

1) EEC இன் அங்கத்துவ நாடுகள் ஒரு பொதுவான கூட்டப்பட்ட பெறுமதி வரி முறையினைப் பின் பற்றுகின்றன. இது வாடிக்கையாளரிடம் இருந்து அறவிடப்பட்டது.
2) EEC இன் நிர்வாகக்குழு சமூகரீதியான "காட் டல்கள்" ஏற்படுவதை தடுக்கின்றது. அத்துடன் போட்டியைக் கட்டுப்படுத்துவதற்காக தனியு ரிமை நிலையும் தடுக்கப்படுகின்றது.
3) மந்திரிசபையில் கடைசி முடிவு எடுக்கப்படும்.

இந்த EEC யுடன் EFTA ஆனது கைத்தொழில் பொருள்களில் சுதந்திர வர்த்தக ஒழுங்கு படுத் தலை ஏற்படுத்த பேச்சு வார்த்தைகளில் ஈடு பட்டது.

இந்த EEC இன் வெற்றியானது வளரும் நாடு களிலுள்ள பல பொருளாதார ஒருங்கிணைப்பு முயற்சிகள் தம் அபிவிருத்தி முயற்சிகளாகத் தூண்டப்பட்டுள்ளன. ஆனால் இம் முயற்சி வரை யறுக்கப்பட்ட வெற்றியையோ தோல்வியையோ தான் சாதித்துவருகின்றனமை அவதானிக்க முடி கின்றது.

இலங்கை ஆரம்பத்தில் பிரித்தானியாவின் குடி யேற்ற ஆதிக்கத்துக்கு உட்பட்டு வந்ததால் பொருளா தார ரீதியில் அதனுடன் தொடர்பினை ஏற்கனவே கொண்டிருந்தமையும் ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய சமூகத்தில் அங்கத்துவம் பெற்றபின் ஏனைய ஐரேப் பிய நாடுகளுடனும் இலங்கை, தொடர்புகளை ஏற்ப டுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதால் தொடர் புகளை ஐரோப்பிய சமூதாயத்துடன் ஏற்படுத்திக் கொண்டது. இத்தகைய தொடர்புகளாக

* தேயிலை இறப்பர் போன்ற பாரம்பரிய ஏற்று மதிப் பொருள்கள் மட்டுமன்றி தைத்த ஆடை கள் போன்ற ஏற்றுமதிப் பொருள்களும் இச்சமு தாயத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றமை.
* இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதா ரணமாக மகாவலி அபிவிருத்திப் பிரதேசத்தில் குடியேற்றம், நீர்ப்பாசனம் என்பவற்றின் அபிவி ருத்திக்கு உதவுதல்
* வருடாந்தம் புதுப்பிக்க வேண்டிய இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான சலுகையைப் பெற்றுக் கொள்ள 1976ல் ஒப்பந்தம் செய்தமை
* இலங்கையின் தேயிலை, ஆடைகள், மற்றும் வர்த் தகப் பொருள்கள் ஆகியவற்றைப் பிரபல்யமடைய செய்யும் நோக்கில் டென்மார்க், மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளில் வர்த்தக மையங்களை ஸ்தா பித்தல் போன்ற பல வழிகளில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் இலங்கை தொடர் புகளைக் கொண்டு வருகின்றது.

ஐரோப்பிய சமூகத்தின் 12 நாடுகள் தனித்த ஒரு ஐரோப்பிய சந்தையை பிரகடனம் செய்தமை யும் இதுவே 1990 தை தொடக்கம் ஐரோப்பிய யூனி (EU) என செயற்பட்டு வருகின்றது.

குறிப்பு: இவ்வகையில் ஐரோப்பிய பொருளாதார சமூகம் அல்லது ஐரோப்பிய சமூகம் ஆனது ஐரோப்பாவில் உருவான பிரதான மூன்று பொருளாதார உடன்படிக்கைகளில் ஒன்றாகும். ஏனைய இரண்டும்முறையே.

1) ஐரோப்பிய பரஸ்பர பொருளாளாதார உத விக்கான கவுன்சில் (Comecon) என்பதும், (இது 1949 இல் உருவாக்கப்பட்டது.)
2) ஐரோப்பிய சுதந்திர வர்த்தகக் கழகம் (EFTA). என்பதும் ஆகும் (இது 1959 இல் உருவாக்கப் பட்டது ஆகும்.)

தற்போது 1984 ஆம் ஆண்டு லச்சம் பேர்க் பிரகடனத்தின் மூலம் EFTA, EEC (EC) என்பவற் றின் உறுப்பு நாடுகள் ஐரோப்பிய பொருளா தாரபிரதேசம் (EEA) என்ற உள் பிராந்திய அமைப்பை உருவாக்க இணங்கியமையும், இதன் மூலம் பொருள்கள், சேவைகள், மூலதனம், மற்றும் ஊழியம் என்பவற்றை இப்பிரதேசத்தில் சுதந்திரமாக அசைவது தொடர்பாக பேச்சு வார்த்தைகள் 1992 இல் முற்றுப்பெற்றமையும் சுட்டிக் காட்டப்படக் கூடிய விடயமாகும்.

* ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக அமைப்பு( எவ்ற்ரா) European Free Trade Association (EFTA)

ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக ஒப்பந்த அமைப்பு என்பது 1960 ஆம் ஆண்டில் ஆஸ்திரியா டென்மார்க், நோர்வே, போர்த்துக்கல், சுவீடன் சுவிஸ்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளால் அங்கிகரிக்கப்பட்ட 'ஸ்டொக் ஹோம்' பொது இணக்க ஒப்பந்தத்தின் படி உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

இவ் அமைப்பின் நோக்கங்கள் என்ற வகையில்

* அங்கத்துவ நாடுகளிடையே கைத்தொழில் பொருள்கள் தொடர்பான கட்டில்லாத வர்த்தகத்தை மேற்கொள்ள அநுமதித்தல்
* ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற பல நோக்கங்களைக் கொண்டு செயற்படுகின்றது.

இந்த அமைப்பில் 1961 இல் பின்லாந்தும், 1970 ஐஸ்லாந்தும் இணைந்து கொண்டன பின் 1973 இல் இங்கிலாந்தும் டென்மார்க்கும் இதில் இருந்து வெளியேறி (விலகி) ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் இணைந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய யூனியன் (European union) (EU)

ஐரோப்பிய சமூகத்தின் 12 உறுப்பு நாடுகளாலும் பிரகடனம் செய்யப்பட்ட ஐரோப்பிய சந்தையே 1990 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐரோப்பிய யூனியன் (EU) என அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன் செயற்பாட்டின் விளைவாக

* அங்கத்துவ நாடுகளுக்கு இடையில் நிலவி வந்த வர்த்தகத்தோடு தொடர்பு பட்ட தேச எல்லைகளின் தடங்கல்கள் ஒழிக்கப்பட்டமை
* ஐரோப்பிய யூனியன் பிரதேசத்திற்குள் பொருள்கள் தடங்கல் இன்றி சுதந்திரமாக எடுத்துச் செல்ல உறுதி செய்தமை
* இந்தப் பாரிய பொருளாதார அணி நாடுகளுடைய மற்ற ஒரு தீர்மானமாக இப் பிரதேசத்திற்குள் அநுமதிக்கப்படுகின்ற பொருள்கள் தொடர்பான ஒரு சீரான தர நிர்ணய ஒழுங்கு விதிகளை மேற்கொள்கின்றமையும் இதற்காக சர்வதேச தர நிர்ணய அமைப்பு 9000 (ISO - 9000) தர முகாமை முறை உருவாக்கப்பட்டது இது தொடர்பான விதந்துரைகளை வழங்கிய நிறுவனம் புருஸ்ஸல்ஸில் உள்ள இது தொடர்பான நிறுவனமே ஆகும்.
* எனினும் இவ் யோசனையை அங்கத்துவ நாடுகள் பல தரப்பட்ட மன நிலைகளுடன் வரவேற்றன. மேலும் இத்தகைய மாற்றமானது ஐரோப்பிய யூனியனுக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் தொடர்பான மிகக் கடுமையான தர நிர்ணயத்தை பேணி வருவது குறிப்பிடத்தக்கது. இதற்கேற்ப
* உற்பத்திகளின் வடிவம்
* ஆவணப்படுத்தும் நடைமுறை
* உள்ளீடுகள் கொள்வனவு செய்யப்படும் கட்டங்கள்
* பதப்படுத்தற் கட்டுப்பாடு
* பரிசோதனை மற்றும் பரீட்சிப்பு
* கையாளல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல்
* விநியோகம் போன்ற செயற்பாடுகளில் கூடிய கவனம் எடுத்து வருவதுடன் தரமுகமையை மேம்படுத்த என
* திறமையான முகாமை நடைமுறைகள்
* ஆளணிப் பயிற்சி
* தரம் தொடர்பான தணிக்கை
* விற்பனைக்குக் பின்னரான சேவைகள் போன்றன பற்றியும் நிபந்தனை விதித்துள்ளமை குறிப்பிடலாம்.

இவ்வகையில் இலங்கை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்கின்ற

* ஆடைகள்
* தேங்காய்த் துருவல்
* இறப்பர்
* பழவகைகள், மரக்கறி
* விவசாய அடிப்படையிலான ஏனைய ஏற்றுமதிக் கைத்தொழில் பொருள்கள் போன்ற பல பொருள்கள் காணப்படுகின்றன, இதன்படி 1988 இல் 11,037 மில்லியன் ரூபா (349 SDR) பெறுமதியானதும் 1992 இல் 34826 மில்லியன் ரூபா ( 550 SDR) பெறுமதியானதுமான பொருள்களை இலங்கை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் இந்த ஐரோப்பிய யூனியன் பிரதேசத்திற்குள் ஒரே விதமான நாணய, இறைவரிக் கொள்கைகள் கடைப்பிடிக்கின்றதோடு பொதுவான ஒரு நாணயத்தைப் பயன்படுத்துகின்ற தன்மையும் குறிப்பிடக்கூடிய பண்பாகும்.

* தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கழகம் அல்லது சம்மேளனம்
(Association of South East Asian Nation (ASENA)

* ஏஷியன் அமைப்பு:-

1967 ஆண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மலேசியா இந்தோனேசியா போன்ற நாடுகள் ஆசிய பிராந்திய நாடுகளுடைய பொருளாதாரம், கலாசாரம் பாது காப்பு போன்ற செயற்பாடுகளின் ஒத்துளைப்பையும் அபிவிருத்தியையும் உருவாக்குவதற்காக உருவாக்கிய ஓர் பிராந்திய அமைப்பே தென் கிழக்கு ஆசிய நாடு களின் கழகம் எனப்படும். புருணையும் 1984 இல் இதனுடன் இணைந்தது.

இந்த அமைப்பானது

* தென் கிழக்காசியப் பிராந்தியத்திற்குள் பொரு ளாதார விருத்தியையும், வளர்ச்சி சமூக முன் னேற்றங்கள் கலாச்சார அபிவிருத்தி போன்ற வற்றைக் கூட்டு முயற்சி மூலம் விரைவுபடுத்தல்.
* ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திற்கு இசைவாக பிராந்திய நாடுகளுடன் உருவாக்கிக் கொண்ட சமாதான தொடர்புகள் மூலமும் சமாதான உறு தியை நிலை கொள்ளச் செய்தல்.
* கூட்டுழைப்பு, அன்னியோன்ய உதவி விருத்தி மூலம் பொருளாதார, கலாசார தொழில் நுட்ப விஞ்ஞானத் துறைகளை விருத்தி செய்தல்
* கல்வி, தொழில், சேவைகள், விஞ்ஞான நிருவா கத் துறைகளில் பயிற்சியினை வழங்கலும் ஆராய்ச்சி மேற்கொள்ளல் மூலம் உதவி வழங்கலும்
* அங்கத்துவ நாடுகளின் விவசாயம் கைத்தொழில் போக்கு வரத்துக்களில் விருத்தி ஏற்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
* தென் கிழக்கு ஆசியா பற்றிய கல்வியினை விருத்தி செய்தலையும் பிற அமைப்புக்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுதல் போன்றபலவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

மேற்படி நோக்கங்களைச் செயற்படுத்த அகங்கத் துவ நாடுகளின் அமைச்சர்களை உள்ளடக்கிய 5 வரு டத்திற்கு ஒரு முறை கூடப்பட்டு, இத்துடன் தொடர் புடைய விடயங்களை கலந்துரையாடும் அமைச்சு மாநாடும் அன்றாட தேவைகளை கவனிக்கவென செயற்குழு ஒன்றினையும், மேலும் வியாபாரம் வங்கிச் செயற்பாடு தொடர்பு சாதனங்கள், விவசாயம் கட் டுரை போன்றவற்றை செயற்படுத்த பிரதான குழுக் களையும் கொண்டு செயற்படுத்துவதோடு மட்டுமன்றி இந்தோனேசியாவில் உள்ள ஜகார்த்தா நகரிலும் 1976 இல் பிரான தலைமைச் செயலகத்தை அமைத்து செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது மேலும் 1980 களில் உறுப்பு நாடுகளுக்கு இடையே முன்னுரிமைத் தீர்வைகள் அறிமுகம் செய்து வைக் கப்பட்டதுடன் இது உறுப்பு நாடுகளின் வர்த்தக த்தில் 90% ஐ உள்ளடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

* மேலும் இது பொதுவான ஒரு வெளித்தீர்வை முறையொன்றை அமுல் செய்தல் தொடர்பாக 1990களில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் கள் முக்கியமானது. இதன் நான்காவது உச்சி மாநாட்டில் வெளிநோக்கிய சந்தை வழிப்பட்ட எஷியன் சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (AFTA) ஒன்றினை உருவாக்குவது தொடர்பான உடன் படிக்கை நிறைவேறியமையும் சுட்டிக் காட்டப் படக்கூடியது.
* இலங்கை இந்துசமுந்திர சமாதன பிராந்திய பிரே ரணைக்கு ஆதரவினை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்றுமதிப் பொருட்களுக்கு சிறந்த விலைகளைப் பெறவும் 1970இன் இறுதிப்பகுதியில் தன்னையும் இணைத்துக் கொள்ள எடுத்த முயற்சிவெற்றி பெறவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட கூடிய ஒன்றாகும்.

கொழும்புத்திட்டம். (Colombo Plan)

ஆசியாவின் ஒரு பகுதியான தென்னாசிய நாடு களுடைய பொருளாதார அபிவிருத்தி கருதி தோற்று விக்கப்பட்ட திட்டமாகவும் அதுவும் கொழும்பில் அமைக்கப்பட்டதன் விளைவாலும் கொழும்புத்திட் டம் என்றபெயர் பெற்ற இத்திட்டம் 1950 ஜனவரி 06 ஆம்திகதி கொழும்பில் பொதுநலவாய வெளிநாட்டு அமைச்சர்களுடன் கூட்டப்பட்ட கூட்டத்தில் முதன் முதல் முன்வைக்கப்பட்டமையும் இதற்கு முன்னோடி களாக இலங்கை, அவுஸ்ரேலியப் பிரதிநிதிகளாக முறையே ஜெயவர்த்தனாவும், பர்னி ஸ்பென்டரும் விளங்கினர். மேலும் அவுஸ்ரேலியாவில் 'சிட்னி' நக ரில் அதே வருடம் மே மாதம் நடந்த கூட்டத்தில் கொழும்புத்திட்ட நாடுகளின் தலை நகரங்களில் மாநாடுகள் நடத்துதல் தொடர்பான தீர்மானத்தை எடுத்ததோடு பின் லண்டன் நகரில் நடைபெற்ற மா நாடு ஒன்றில் ஆசிய சமாதானப் பிராந்தியத்தில் அபி விருத்தி அடையாத நாடுகளுக்கு மூலதனத்தையும் தொழில் நுட்பத்தையும் பெற்றுக்கொடுக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டதோடு 1951 யூலை 1ஆம் திகதி முதல் இக்கொழும்புத்திட்டம் செயற்படத் தொடங் கியது.

இத்திட்டமானது தென்கிழக்காசிய நாடுகளின் அன்னியோன்னியமான பொருளாதார ஒத்துழைப்பு மூலம் அபிவிருத்தியினை ஏற்படுத்தும் அடிப்படை நோக்கினைக் கொண்டிருந்தது. பின் நோக்கங்கள் விரிவுபட்டு பொருளாதார அபிவிருத்தியுடன் மட்டும் நின்றுவிடாது

* சமூக விருத்தியிலும் கவனம் செலுத்துவதோடு முதலில் தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளுக்கு மட்டும் என இருந்த முறை பின் முழு ஆசியாவுக்கும் பரவிச் சென்றுள்ளதோடு அங்கம் வகிக்கும் நாடுகளுக்குரிய அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்களுக்கு சிறப்புத் தேர்ச்சி பெற்ற அறிஞர்களைப் பகிர்ந்து கொள்ளல்

* புலமைப் பரிசில் வழங்கல் போன்ற நோக்கங்களுடன் 7 நாடுகளைக் கொண்டிருந்த இத்திட்டம் பொதுநலவாயத்தை சேர்ந்த நாடுகள் மட்டுமன்றி சேராத நாடுகளும் இணைந்து மொத்தம் ஆறு அபிவிருத்தி அடைந்த நாடுகளையும் உள்ளடக்கி 26 நாடுகள் உள்ளதுடன் மேற்படி வளர்ந்த நாடுகளில் இருந்தே அதிகளவு உதவியும் கிடைக்கின்றது. இவ்வகையில் இத்திட்டப்படி உதவி வழங்குகின்ற வளர்ந்த நாடுகளாக ஐக்கிய அமெரிக்கா குடியரசு, ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்ரேலியா, ஜப்பான், சிங்கப்பூர், நியூஸ்லாந்து போன்ற நாடுகள் இரும்பினும் 1991இல் பிரித்தானியாவும் கனடாவும் விலகி உள்ளமையும் மேலும் இத்திட்டத்தில் இருந்து ஆப்கானிஸ்தான் பர்மா, பங்களாதேஷ், பூட்டான், கம்போடியா பிஜித்தீவுகள், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், தென்கொரியா, லாவோஸ், மலேசியா, மாலைதீவுகள், நேபாளம், பாகிஸ்தான் பபுவாநியுகினி, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்னாம் போன்றவற்றோடு இலங்கையும் சேர்ந்து 20 நாடுகள் உள்ளன.

இக் கொழும்பு திட்டம் ஆனது நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ள அங்கத்துவ நாடுகளிடம் சமமான பணத்தை பெறுவதுடன் பொதுநிதியம் ஒன்று ஸ்தாபித்து அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவி வழங்குவதோடு மேற்கூறிய வளர்ந்த நாடுகளில் இருந்து தற்போது கனடா பிரித்தானியா நீங்களாக ஏனைய 20 நாடுகளுக்கும் உதவி வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் உதவி விவசாயம், செய்திப் பரிமாற்றம், மின்சக்தி, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் கூடிய கவனம் எடுத்து தொழிநுட்ப பயிற்சிப் புலமைப் பரிசில், ஆய்வு, உபகரணம், நிதியுதவி செய்ததோடு போதைப்பொருள் நுகர்வில் தோன்றக்கூடிய கேடுகளை நீக்கப் பல விதிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறாக செயற்படும் இத்திட்டத்தில் இருந்து இலங்கைக்கு பொறித்தொகுதிகள், வாகனங்கள், டிரக்டர், புகையிரத என்ஜின்கள், புகையிரதப் பெட்டிகள், விவசாய உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள், கைத்தொழில் நுட்ப அறிவு, சிறப்பு அறிவின் வளர்ச்சி, புலமைப் பரிசில்கள், வெள்ளம், வரட்சி நிவாரணங்கள் போன்றி பல வழிகளில் உதவிகளை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

*** வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (நவ்றரா) (NAFTA)**

இது 1994 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முழு அளவில் செயற்படத் தொடங்கியது. இது அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி இந் நாடுகளுக்கிடையிலான உள்வர்த்தகத்தில் நிலவி வருகின்ற கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதோடு பிற 3 ஆம் தரப்பு நாடுகளில் இருந்து வருகின்ற இறக்குமதிகள் தொடர்பான கட்டுப்பாடு தொடர்ந்து காணப்படுகின்றது. அதேநேரம் ஐரோப்பாவில் ஐரோப்பிய யூனியன் (EU) மற்றும் ஆசியாவில் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஏஷியன் (ASEAN) நாடுகளுக்கு இடையிலும் கூடியளவில் நடைபெற்றுவந்த பிராந்திய வர்த்தக உடன்படிக்கையின் காரணமாகவே (NAFTA) வின் அவசியம் புரியப்பட்டிருந்தது. இவ்வகையில் இந்த (NAFTA) ஆனது

* மெக்சிக்கோ அதிக வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுத்தல்
* ஐக்கிய அமெரிக்கா சந்தையிலான தன் பிரவேவிருத்திக்கு வழிசெய்தல்
* ஐக்கிய அமெரிக்கா, கனடா, இரண்டும் மெக்சிக்கோவில் வர்த்தக முதலீட்டு வாய்ப்புக்களை விருத்தி செய்தல்
* மெக்சிக்கோவின் எண்ணெய் மூலாதாரங்களில் பலன் பெறல்
* சார்புரீதியான அந்நாட்டு மலிவான ஊழியம் மூலம் பயன் பெறல்.

போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு செயற்பட்டுவருகின்றது.

அமெரிக்காவுக்கு 1991 ஆம் ஆண்டிலேயே கனடா, ஜப்பான் நாடுகளுக்கு அடுத்தபடியான வர்த்தகக் கூட்டாளியான மெக்சிக்கோ (2/3 பகுதி ஏ/தி இ/திக்கும் வகை கூறும்) காணப்பட்டது. இதனால் தான் உலக வர்த்தகத்திலேயே NAFTA) 16% பெறுவதுடன் பிராந்தய மொ. தே. உ/தி 655,000 கோடி (US$), ஆகவும் குடித்தொகை 36.5 கோடி ஆகவும் உள்ளது. (மெகசிகோ – 8.1 கோடி) இதன் உடன்படிக்கை 15 வருட காலத்தில் கட்டம் கட்டங்களாக செய்து வருவதோடு 5 வருட பகுதியில் 235 கோடி (US$) தீர்வைகள் நீக்கப்படும். மேலும் வட அமெரிக்காவில் உற்பத்தியான பொருட்களுக்கு மட்டும் தீர்வை ஒழிக்கப்படுகிறது. இப்பிராந்தியத்திற்குள் நிலைமாற்றம் ஏற்படும் பொருள்களுக்கே தீர்வை விகிதம் குறைவடையும். இது 1970 களிலேயே பிராந்தியததுக்கிடையில் மொத்த ஏ/தியில் 36% பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

* பொருளாதார ஒருங்கிணைப்புகள்

உலகில் உள்ள பிராந்தியங்களில் உள்ள அனைத்து நாடுகளும் அல்லது சில நாடுகள் இணைந்து வர்த்தகத்தில் காணப்படும் தடைகளை முழுமையாக அல்லது பகுதியாக நீக்குகின்ற நோக்கோடு ஏற்படுத்துகின்ற வர்த்தகக் கொள்கைகளை பொருளாதார ஒருங்கிணைப்பு எனலாம். இது கீழ் வரும் வடிவங்களில் ஏற்படக் கூடியது. அவையாவன:

1. தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Arrangements)

இவை அங்கத்துவமல்லாத நாடுகள் மீது விதிக்கின்ற வரியினை விட தமக்கிடையே குறைத்த தடைகளை விதிப்பதைக் குறிக்கும்

உ+ம்:- 1932 இல் உருவாக்கப்பட்ட பிரித்தானிய பொது நலவாயத் தெரிவுத் திட்டம் (Biritish Commonwealth Preference scheme)

3. சுங்கக் கூட்டு (A Customs Union)

இது அங்கத்துவ நாடுகளுக்கிடையே எவ்வித தீர்வைகளையும் கொண்டிராததுடன் அங்கத்துவம் வகிக்காத ஏனைய நாடுகள் மீது ஒரு பொதுவான தீர்வைமுறையை கடைப்பிடித்தலைக் குறிக்கும்.

உதாரணம்: 1958 இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஐரோப்பிய பொருளாதார சந்தை (European Economic Community EEC European Common Market)

4. பொதுச்சந்தை: (A Common Market)

இது அங்கத்துவ நாடுகளிடையே மூலதனமும், ஊழியமும் எவ்வித தடைகளுமின்றி அசையக் கூடிய நிலையைக்குறிக்கும்.

உதாரணம்: 1970 இல் ஐரோப்பிய சமூகமானது பொதுச்சந்தை என்ற நிலையை அடைந்தது.

5. பொருளாதாரக் கூட்டு: An Economic Union)

இதில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் தமக்கிடையே நாணய, நிதி, நடைமுறைக் கொள்கைகளில் ஒத்த தன்மையினை பேணுகின்ற தன்மையைக் கொண்டுஉள்ளது. இவ்வகையில் பொருளாதார ஒருங்கிணைப்பின் மிகச் சிறந்த ஒரு நிலையாக இப் பொருளாதாரக்கூட்டு விளங்குகின்றது.

உதாரணம்: 1960 இல் பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸ்கம் பேர்க் ஆகிய நாடுகள் இணைந்துஉருவாக்கிய "BENELUX" ஐக் சுட்டிக்காட்டலாம்.

எனினும் இவ்வாறாக பிராந்திய ரீதியில் ஏற்படுத்தப்படுகின்ற பொருளாதார ஒத்துழைப்புகள், ஒப்பந்தங்கள், ஒருங்கிணைப்புக்களின் செயற்பாட்டால் சர்வதேச ரீதியாக வர்த்தக ஓட்டத்தில் பாரிய தடைகளை உருவாக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய தடைகளில் இருந்து விடுபட உலகரீதியில் உலகநலனை மொத்தமாக உருவாக்கக் கூடிய வகையில் பொதுவான ஒருநிறுவனத்தின் அவசியம் உணரப்பட்டு வரிகள் மற்றும் சுங்கத்தீர்வைகள் மற்றும் வியாபாரம் தொடர்பான பொது உடன்பாட்டு அமைப்பான GATT இன் மறுவடிவமான தற்போதைய உலகவர்த்தக நிறுவனம் (World Trade Organization WTO) தாபிக்கப்பட்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால் இதன் வெற்றிகூட அதன் செயற்பாட்டில்தான் தங்கியுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்படவேண்டும்.

இவ் வகையில் உலகயுத்தங்களைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் இருந்து இன்று வரை பல பிராந்திய ஒத்துழைப்புக்கள், உருவாகி வருவதுடன் அவற்றுக்கிடையில் பல்வேறு ஒப்பந்தங்களும் ஏற்பட்டு செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல அமைப்புக்கள், ஒப்பந்தங்கள் உருவாகி வருகின்றபோதும் அவற்றுக்கிடையே பெரிய நாடு, சிறிய நாடு, வளர்ந்த நாடு, வளர்முக நாடு, குறைவிருத்தி நாடு என்ற வகையில் சந்தேக நோக்கோடு செயற்படாது பரஸ்பர, புரிந்துணர்வு விட்டுக் கொடுத்தல் பண்புகளின் அடிப்படையில் செயற்படின் இவற்றின் நோக்கங்கள் வெற்றி அடையும் என்பதில் சந்தேகம் இராது என்பதைக் கூறுவதோடு இத்தகைய பல பிராந்திய ஒத்துழைப்பு, ஒப்பந்தங்களில் (க. பொ. த) உயர்தர மாணவர்களின் நலனைக் கவனத்தில் கொண்டு) அவற்றின் தோற்றம் நோக்கம் செயற்பாடு இலங்கையில் அவற்றின் பங்கு என்ற விடயங்கள்பற்றி மிகவும் சுருக்கமாக ஆராயப்பட்ட இச் சிறு ஆய்வு மாணவர்களுக்கும் பெரிதும் பலன் அளிக்கும் அதே நேரம் ஏனையவர்களுக்கும் பயன்உடையதாக அமையும் என்று நம்புகிறேன் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கொக்குவில் இந்து வணிக மன்றத்தால் நடாத்தப்பட்ட வணிக வினாடி வினாப் போட்டி

மேற்படி போட்டி ஆண்டு 9, 10, 11, வகுப்புகளிற்கு 12-06-97, 13.06.97 திகதிகளில் நடாத்தப் பட்டது.

வணிக மன்றத்தின் சார்பாக கொக்குவில் இந்து வர்த்தக ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட இப் போட்டியில் கலந்து கொண்ட அணியினர் விபரம் பின்வருமாறு.

| 9A | 9B | 9C | 9D |
|---|---|---|---|
| க பாதினி | இ. ரகுநாதன் | சி. சிவசங்கர் | அ. பத்மினி |
| க. கேசவன் | தெ. கீர்த்திகா | சா. லகுமாரன் | கு. சிந்துஜா |
| அ. ஜெனார்த்தனன் | செ. தக்ஷாஜினி | வி. சசிகரன் | ப. கஜராம் |
| தி. பிரதீபன் | து. துசாந்தி | செ. பகீரதன் | ர. ரதீபா |
| க. நிசாந்தன் | பா. திருசங்கர் | தி. யாதவன் | ப. ஆரணி |

| 10 A | 10 B | 10 C | 10D |
|---|---|---|---|
| கு. மயூரன் | பா. செந்தூரன் | சி. கோபிநாத் | வே. செவ்வந்தி |
| சி. நஜிதா | ந. ரஜீவன் | பா. நிர்மலகாந் | அ. சுவர்ணா |
| அ. வேணுஷா | ந கமலசரவணபவசர்மா | ச. வாகீசன் | ப. பத்மகாந் |
| ந. சுவர்ணலதா | ப. மயூரன் | நிசாந் | ந. முகுந்தன் |
| சி. உமாராணி | ம. சுஜீவன் | செ. சாருதர்ஷன் | சி. பிரசாந் |

| 11 A | 11 B | 11 C | 11 D |
|---|---|---|---|
| பிரபாகான் | சி. றஜிந்திரா | வே. மயூரதன் | சி. அர்ஜீன் |
| த. விஜெயேந்திரா | சா. காந்தரூபன் | க. கஜேந்திரன் | சு. கிருபதயாபரன் |
| நா. சுகந்தி | நா. சஞ்சுதன் | சா. சுதர்ஷன் | ஹரிராஜ் |
| கு. தர்ஷிகா | சி. முரளீதரன் | ம. காளிதாஸ் | பாலினி |
| செ. தர்ஷினி | ச. திலீபன் | சு. சபேஸ் | ச. சர்மிகா |

**வினாடிவினா அரையிறுதிப் போட்டி**

ஆண்டு 9 A யும் ஆண்டு 9 C யும் போட்டியிட்டு 9 A யும் இறுதிப்போட்டிக்கு தெரிவானது 40.70
ஆண்டு 9 B யும் ஆண்டு 9 D யும் போட்டியிட்டு 9 D யும் இறுதிப்போட்டிக்கு தெரிவானது 40:46

9 Cயில் சா. லகுமாரன் தன்குழுவுக்கு 30 புள்ளிகளையும்

9 D யில் அ. பத்மினி தன் குழுவுக்கு 24 புள்ளிகளையும் உயர் புள்ளிகளாப் பெற்றுக் கொடுத்திருந்தனர்

2. 10Aயும் 10 C யும் போட்டியிட்டு 10 A இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது 68:50

10Bயும் 10 D யும் ,, 10D ,, ,, ,, 50:52

10Aயில் கு. மயூரா தன் அணிக்கு 26 புள்ளிகளையும்

10Dயில் ந. முகுந்தன் தன் ,, 36 ,, உயர்புள்ளிகளாகப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

3. 11 Aயும் 11 C யும் போட்டியிட்டு 11 A இறுதிப் போட்டிக்கு தெரிவானது 72:24

11 B யும் 11 D யும் போட்டியிட்டு 11 B ,, ,, ,, 54:24

11 A யில் கு. தர்ஷிகா தன குழுவுக்கு 28 புள்ளிகளையும்

11 B யில் ச. திலீபன் ,, ,, 16 ,, உயர் புள்ளிகளாகப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

இறுதிப்போட்டி

1. ஆண்டு 9 C யும் 9 D யும் போட்டியிட்டு 70 புள்ளிகளைப் பெற்று 9C முதலாவது இடத்தையும் 48 புள்ளிகளைப் பெற்று 9 D 2 ஆம் இடத்தையும் பெறுகிறது. 9C ஐச் சார்ந்த சா. லகுராமன் தன் அணிக்கு ஆகக் கூடிய 40 புள்ளியினைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

2. ஆண்டு 10 A யும் 10 D யும் போட்டியிட்டு 58 புள்ளிகளைப் பெற்று 10 D யும் முதலாம் இடத்தையும் 48 புள்ளிகளைப் பெற்று 10 A 2 ஆம் இடத்தையும் பெறுகிறது. 10 A ஐச் சேர்ந்த சி. நஜிதா இப்போட்டியில் ஆகக்கூடிய புள்ளியாக 28 ஐப் பெறுகிறார்.

3. ஆண்டு 11Aயும் 11Bயும் போட்டியிட்டு 84 புள்ளிகளைப் பெற்று 11A முதலாமிடத்தையும் 32 புள்ளிகளைப் பெற்று 11B 2ம் இடத்தையும் பெறுகிறது. 11Aஜச் சார்ந்த நா. சுகந்தி தன் அணிக்கு உயர் புள்ளியாக 34ஐப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

## நன்றி

*இச்சுடர் வெளியீட்டுக்கு உதவிய அதிபர், ஆசிரியர்கள், செயற்குழு உறுப்பினர் அனைவருக்கும்............................ நன்றி*

*கல்லூரியின் வணிகச்சுடர் வெளியீட்டிற்கு அயராது உழைத்தவர்கள் அனைவருக்கும்........................................ நன்றி*

*எமது சஞ்சிகைக்கு கட்டுரைகள் வழங்கிய பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும்...................... நன்றி*

*விளம்பரங்கள் தந்த நிறுவனங்கள் அனைத்துக்கும்................................ நன்றி*

*எம்மை மறவாது தமது சஞ்சிகைகளை அனுப்பிய சகல கல்லூரிகளுக்கும்......... நன்றி*

*சஞ்சிகையின் முன் அட்டையினை வடிவமைத்து தந்த எமது ஆசிரியருக்கும், அழகுறப்பதிப்பித்த அச்சகத்தாருக்கும்...... —.......... நன்றி*

பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.